©
தமிழ்நாடு அரசு
2007

பதிவெண் : எம். 71

# மதுரை மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

மதுரை, அக்டோபர் 15, 2007
புரட்டாசி 28. திருவள்ளுவர் ஆண்டு - 2038 [எண் 23

## உள்ளாட்சி துறை அறிவிக்கை

( ந.க.எண் 2988 / பி2, நாள் 27. 09. 2007 )

### மேலூர் நகராட்சி ,

### குடிநீர் விநியோக துணை விதிகள்

நகராட்சி பகுதியிலுள்ள வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க 1920 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 130, 131 (1 ), (2), (3), 132 (1 ), 132 (ஏ), 134, 135, 306, 308 மற்றும் 309 ஆம் பிரிவுகளின்கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்.

நகராட்சியில் புதியதாக வீட்டுக் குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம் பழுது பார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இதில் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இனங்களும் அடங்கும். இந்த விதிகளின் கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும், குடிநீர் அளவை கணக்கிடவும், குடிநீர் இணைப்பில் அளவுமானி பொருத்துதல், குடிநீர் குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவைகள் இந்த துணை விதிகளில் இடம்பெறுகின்றன.

### MELUR MUNICIPALITY

### BY-LAWS RELATING TO WATER SUPPLY

Bye-laws framed under sections 130, 131 (1), (2), (3), 132 (1), 132 (A), 134, 135, 306, 308 and 309 of Tamil Nadu District Municipalities Act 1920 (Revised ) for regularising grant and control of house service connections and other types of connections.

New water supply house service connection granted, name transfer extension alterations, repairs and also proper maintenance in accordance with this bye-laws framed. Provisions were made under this act, to avoid protected water supply wastage, measuring the quantity of supply of water, fixing water meters, porviding water supply takes in House service connection and fire hydrants etc.

1 குடிநீர் இணைப்பு பெறுவதற்காக தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளில் சட்டத்துணை விதிகள் 131 (1) வது பகுதி ( அ ) 132 ஆவது விதிகள் மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தை கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர். வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலம் ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) மற்றும் மதிப்பீடு தயார் செய்து பதிவுக்கட்டணம் ரூ. 100/– ( ரூபாய் நூறு மட்டும் ) செலுத்தி ஆணையருக்கு அனுப்பவேண்டும். பதிவுக்கட்டணம் செலுத்திப் பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதன் அடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும், குறிப்பிடப்படும் வைப்புத்தொகை மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்படவேண்டும்.

அ ) குடிநீர் இணைப்பிற்காக தயாரிக்கப்படும் மொத்த மதிப்பீட்டில் 10 சதவிகிதம் சென்டேஜ் கட்டணம் மற்றும் ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்படும். குறைந்த அளவு கட்டணம் ரூ. 750/– வசூலிக்கப்படும்.

ஆ) குடிநீர் திட்டத்தில் அரசு கட்டிடங்களுக்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்கள் முன்பணமாக நகராட்சிக்கு செலுத்தவேண்டியது இல்லை. இணைப்பு உத்தரவு பெற்ற பின்பு செலுத்த வேண்டும்.

இ ) மேற்கண்ட கட்டணங்களில் வைப்புத் தொகையை தவிர இதர கட்டணங்கள் எதுவும் திருப்பித் தரப்படமாட்டாது. அல்லது செலுத்திய வைப்புத் தொகைக்கு வட்டி எதும் வழங்கப் படமாட்டாது.

2\. குடியிருப்பு உபயோகத்திற்கோ அல்லது குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கோ வழங்கப்படும் இணைப்புகளுக்கும் அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் கட்டணம் வசூல் செய்யப்படும். ஏற்கெனவே அளவுமானி பொருத்தப்படாமல் டேப்ரேட் விகிதத்தில் உள்ள இணைப்புகளுக்கு 60 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பி அளவுமானி இணைப்பாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்படாமல் இருந்தால் மறு அறிவிப்பின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

3 வழங்கப்படும் குடிநீர் குடும்பக் காரியங்களுக்கானதா அல்லது குடும்பக் காரியங்களுக்கல்லாததா என்பது திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 131 ஆவது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரைகளின்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்படும்.

1 Application for the House Service Connection under sub section 1 ( A ) of section 131, section 132 of the Tamil Nadu District Muinicipalities Act, ( Revised ) 1920, as amended should be in individually submitted by the owner of the premises by himself or through authorised representative may be in the Form "A" along with the Registration fee of Rs. 100, ( Rupees One Hundred ) and submitted to the Municipal Commissioner. Based on the seniority of matching the payment of registered charges and a list will be maintained upon the date of registration fees paid on this basis. Further after depositing the prescribed amount and the estimate charges and after obtaining the permission from the Municipality, the connection works should be commenced.

A) This will include a centage of 10% on the net value of the estimate against supervision charges subject to a minimum of Rs. 750/- ( Rupees seven hundared and fifty only ).

B) In case of supply to Government buildings the value of the works and supervision charges connected there with shall not be payable in advance to the Executive Authority. But it shall be payable with in a week of completion of works.

C) The charges levied for giving connection except the deposit will not be returned on any account no interest will be paid for the deposit amounts.

2 The supply of water for domestic and Non-domestic House service connections shall be fixed meters and charges will be based on meter system. The existing tap rate system if any ( without fixing metre ) should be converted into metre system after issuing a notice within 60 days. Otherwise this House service connections will be disconnected with out any further intimation.

3 Any dispute regarding the type of usage whether for residential or non residential purpose would be decided based on the section of 131 of Tamil Nadu Municipalities Act, 1920 and the explanation thereof.

மதுரை. சி. வெ. 23 / 67.

4 (அ) ஒரே இணைப்பின் வாயிலாக குடும்ப பயன்களுக்கும் அவையல்லாத பிற பயன்களுக்கும் சேர்ந்து எடுக்கப்படும் குடிநீர் குடும்பப் பயன்கள் அல்லாத பிற பயன்களுக்கான குடிநீருக்குரிய வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

(ஆ) நகராட்சி மன்றத்தின் உரிமையான ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய நிறுவனங்களுக்கு கொடுக்கப்படும் "பயன் இணைப்புகளும்" கூட அளவுமானி கட்டண முறையில் இருக்க வேண்டியதோடு மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடிநீருக்காக காரியங்களை பொறுத்து குடும்ப பயன் மற்றும் அவையல்லாத பிற பயன்களுக்கான வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

(இ) சொத்துவரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு புதிதாகக் கட்டிடம் கட்டும்போதும் கூடுதல் கட்டிடம் கட்டும்போதும் பெரிய பழுதுகள் பார்க்கும்போதும் நகராட்சி குடிநீர் பயன்படுத்தப்பட்டாலோ அவ்வாறு பயன்படுத்தப் படுவதாக ஆணையர் கண்டுபிடித்தாலோ குடியிருப்பு அல்லாத உபயோகமாக கருதப்பட்டு வணிகக் காரியங்களுக்கான வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

(ஈ) கண்காணிப்புப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், அவர்களின் அங்கீகாரத்துடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறைகளுடன் நகராட்சி மன்றம் தமது நகராட்சி எல்லைக்குட்பட்ட யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கலாம்.

5) (அ) ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரே ஒரு குடிநீர் குழாய் இணைப்பு மட்டும்தான் வழங்கப்படும். அத்தகைய இணைப்பை கட்டுப்படுத்த நீர்வரத்து கட்டுப்பாட்டு இதழ் ( Flow Control Valve) மற்றும் அடைப்பான் பொருத்தப்படும். வேறு பக்கத்து குடியிருப்பு இணைப்புகளிலிருந்தோ அல்லது கொடுக்கப் படவிருக்கும் பயன் இணைப்புகளிலிருந்தோ குடிநீர் வழங்கப்படமாட்டாது.

விளக்கவுரை :-

இத்துணை விதிகளில் இடம் பெறும் "வீடு" எனும் சொல் ஒரே பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களையோ அல்லது தற்போதைக்கு சொத்துவரிக்காக ஒரே பகுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தையோ குறிக்கும்.

(ஆ) அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் போது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குழாய் இணைப்பு மட்டும் கீழ்கண்டவாறு வழங்கப்படும்.

4 (A) Both for domestic and nondomestic purpose water supply thorugh a House service connection was utilized are to be carged at the rate of Non-domestic rate basis.

(B) For the institutional buildings belonging to the Municipal Council also the water charges shall be levied from the occupation by the meter reading and as per the rates depending upon the user or the said premises.

(C ) No connection will be given to the premises to which is not levied property tax. I. an existing domestic House service connection is in th building which the same will be reconstructed o modified or major repairs if protected water supply be utilized this connection has been taken into account as on nondomestic purpose and the rate of charges will be collected accordingly.

(D) The Municipal Council has sanctioned water supply to other local bodies or others with in its Municipal limit with the orders of Superintending Engineer, Commissioner of Municipal Administration's Office within the norms prescribed.

5 (A) The connection to the individual house shall be means of a single pipe the D-System through a ferrule and a flow control valve. Water shall not be supplied from a house or building already assesses separately and no connection shall be given from Existing Connection or a connection proposed to be given for any other premises. The word House shall mean a building standing alone or more than one building that has been assessed under a single assessment for property tax.

**Explanation** :

The Word "House" means in this bye laws one portion of the Building or Buildings or single assessment for property tax.

b) For Multi-storied apartment buildings given shall be of proper size depending upon the number of dwellings as follows :-



1A

| வ எண் (1) | குடியிருப்பு விவரம் (2) | குழாயின் அளவு (3) | குழாய்களின் எண்ணிக்கை (4) |
|---|---|---|---|
| 1 | நான்கு குடியிருப்பு வரை | 20மிமீ பயன்தரும் குழாய் 15மி.மீ. திருகு குறுங்குழாய் | 1 எண் |
| 2 | 5 முதல் 8 குடியிருப்பு வரை | 20மிமீ பயன்தரும் குழாய் 15மி.மீ. திருகு குறுங்குழாய் | 2 எண்கள் |
| 3 | 9 முதல் 12 வரை | 20மிமீ பயன்தரும் குழாய் 15மி.மீ. திருகு குறுங்குழாய் | 3 எண்கள் |
| 4 | 13 முதல் 16 வரை | 20மிமீ பயன்தரும் குழாய் 15மி.மீ. திருகு குறுங்குழாய் | 4 எண்கள் |
| 5 | 17 முதல் 20 வரை | 25மிமீ பயன்தரும் குழாய் 20மி.மீ. திருகு குறுங்குழாய் | 5 எண்கள் |
| 6 | 21 முதல் 40 வரை | 40மிமீ பயன்தரும் குழாய் 20மி.மீ. திருகு குறுங்குழாய் | 6 எண்கள் |
| 7 | 41 முதல் 70 வரை | 40மிமீ பயன்தரும் குழாய் 25மி.மீ. திருகு குறுங்குழாய் | 7 எண்கள் |
| 8 | 70 குடியிருப்பு களுக்கு மேல் | 40மிமீ பயன்தரும் குழாய் 25மி.மீ. திருகு குறுங்குழாய் | 8 எண்கள் |

அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் பொழுது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக வரிவிதிப்பு செய்து அனைத்து குடியிருப்போரிடமும் தனித்தனியாக வைப்புத் தொகை மற்றும் கட்டணம் வசூல் செய்யப்படும்.

6) கோவில்கள், மசூதிகள், மாதா கோவில்கள் ஆகியவற்றுக்கு கொடுக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே. அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகள் கீழ்கண்டவாறு வரைமுறைப்படுத்தப்படும்.

(அ) வீட்டுஉபயோகத்திற்கு வழங்கப்படும் இணைப்பு விதிகள் இதற்கும் பொருந்தும்.

7 இத்துணை விதிகளுக்குட்பட்டு குடிநீர் குழாய்களில் உள்ள நீர் விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளின் அளவு அவற்றில் பொருத்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர இனங்களையும், குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர் நிர்ணயம் செய்வார். அதற்கு தக்கபடி கீழ்கண்ட நிர்ணயம் அளவுகளின்படி அமைக்கப்படும்.

| Sl. No. (1) | Flats details (2) | Details of pipes etc. (3) | Tap Nos. (4) |
|---|---|---|---|
| 1 | For 4 flats | 20 mm pipe 15 mm ferrule | 1 No. |
| 2 | 5 to 8 flats | 20 mm pipe 15 mm ferrule | 2 Nos. |
| 3 | 9 to 12 flats | 20 mm pipe 15 mm ferrule | 3 Nos. |
| 4 | 13 to 16 flats | 20 mm pipe 15 mm ferrule | 4 Nos. |
| 5 | 17 to 20 flats | 20 mm pipe 15 mm ferrule | 5 Nos. |
| 6 | 21 to 40 flats | 20 mm pipe 15 mm ferrule | 6 Nos. |
| 7 | 41 to 70 flats | 20 mm pipe 15 mm ferrule | 7 Nos. |
| 8 | Above 70 Nos. | 20 mm pipe 15 mm ferrule | 8 Nos. |

A Separate property assessment should be levied for each flat and separate deposit amount should be remitted. But a separate property tax assessment should be obtained for each flat of the building.

6 The supply of water to mosques, temples and churches shall be only for drinking purposes. Such supply shall be regularised as follows :-

a) For big temples, Mosques, Churches etc., the water supply shall be only for drinking purpose only and the bye laws applicable to residential connection shall apply to the same.

For residential connections all the pipe shall be as per the table below or as per the pipes approved by the SE, CMA and shall not on any account be more than 15mm.

(1) 15எம்.எம். குழாய் இணைப்பு 10 எம்.எம் திருகு குறுங்குழாய். – 30 மீ. வரை உள்ள இணைப்பிற்கு

(2) 20 எம்.எம். குழாய் இணைப்பு – 15 எம்.எம் திருகு குறுங்குழாய். – 90 மீ. வரை உள்ள இணைப்பிற்கு

இது தவிர வேறு அளவு தேவைப்பட்டாலோ அதை முடிவு செய்ய மேற்பார்வை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும். எல்லா இணைப்புகள், திருகு குறுங்குழாய்கள் மற்றும் இதர உபகரணங்கள் சோதனை செய்து, தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது கண்காணிப்புப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக் கொண்டும் இந்த நிர்ணய அளவு 15 எம்.எம். மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்திய நிர்ணய நிறுவனத்தின் விளக்கக் குறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

8) குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைமைப்பீடத்தில் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக்குழாய் இணைப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையரக மேற்பார்வை பொறியாளரின் ஒப்புதலின்பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை, அளவு ஆகியவை நகராட்சி நிர்வாக ஆணையரகம் மேற்பார்வை பொறியாளரால் நிர்ணயம் செய்ததாக இருக்கவேண்டும்.

9)) (அ) குடியிருப்புகளுக்கு கொடுக்கப்படும் இணைப்புகள் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள் மற்றும் அளவுமானியாவையும் நகராட்சி அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளையும் பார்வையிட வசதி செய்து தரவேண்டும். அவ்வாறு பார்வையிட தடை ஏற்படுத்தினால் அந்தக் குழாய் இணைப்புகளை பார்வையிட முடியாத காரணத்தால் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

(ஆ) குடிநீர் குழாயில் உள்ள திறப்பான்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்கக் கூடாது அல்லது குழாயிலிருந்து சிந்தும் தண்ணீரை மற்றும் வீணாகும் குடிநீர் நகராட்சியால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவுநீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர் குழாயிலோ செல்லும்வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

10) (அ) அளவுமானிகள் நகராட்சி ஆணையாளரின் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளின் சொந்தக் காரர்களாலோ அல்லது வாடகைதாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். அமைக்கப்பட்டுள்ள அளவுமானிகள் எப்போதும் நகராட்சி மன்ற அலுவலர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டிருக்கும் அளவுமானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் கணக்கிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படும்.



i) Upto 30M, 15mm pipe connection with 10 mm ferrule.

ii) Upto 90M, 20mm pipe connection with 15mm ferrule.

If provided that in case where the size is to be increased, the decision of the Superintending Engineer, Commissionerate of Municipal Administration shall be final. All pipe connection will be given through a ferrule and also through a flow control valve. All the materials to be used for new connection shall be only tested materials with ISI.

8 If the distance between the mains and the house connection exceeds 90m, the connection shall be given after the approval by the Superintending Engineer, Commissionerate of Municipal Administration.

9 a) HSC connection given to the residential premises shall be easily visible for inspection by the Municipal staff. The owner of the premises or the occupiers shall facilitate the inspection of the connection by the Municipal staff. If in any place, the inspection is not possible due to the willful act of the owner or the occupier by any means, the said connection will be disconnected.

(b) The Water tap shall not be kept in such a manner to be immersed in water. The water running out from the pipe shall be properly channeled to reach the nearest Municipal drain or sewer.

10 (a) Meter shall be supplied by the owner or occupier of the premises subject to approval of Municipal Commissioner, the meter shall be always under the lock and key of the officers and Municipal staff. The said meters will be read and maintained by the Municipal staff every month.

(ஆ) அளவுமானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கி பொருத்த வேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 5/– வசூலிக்கப்படும்.

(இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்து விட்டால் சொந்தச் செலவில் அளவுமானிகளை பழுதுபார்க்க ஏற்பாடு செய்யவேண்டும். பழுது பார்த்தல் பணியை நகராட்சிப் பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு திங்கள் காலத்திற்குள் ஆணையரின் உத்தரவு பெற்று செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தருவாயில் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

11 (அ) வீட்டு உபயோகம் இணைப்பு ஒன்றுக்கு ரூ 3,000/–

(ஆ) வீட்டு உபயோகமற்ற வியாபார நோக்கு இணைப்பு ஒன்றுக்கு ரூ. 6,000/–

(இ) தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்றுக்கு ரூ. 10,000/–

12 **குடிநீர் கட்டணம்**

(அ) அளவுமானி மூலம் குடும்ப பயன்களுக்கு வழங்கப்படும் குடிநீர் மாதம் ஒன்றுக்கு 7500 லிட்டர் வரை ரூ. 50/– அதற்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீருக்கு 10,000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு ரூ. 6/– வீதம் வசூலிக்கப்படும். 10,000 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் குடிநீருக்கு 1000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு ரூ. 8/– வீதம் வசூலிக்கப்படும்.

(ஆ) குடும்ப காரியங்களுக்கு அல்லாத தொழிற்சாலை மற்றும் வணிக காரியங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 7,500 லிட்டர் வரை ரூ. 100/–ம் 7500 லிட்டருக்கு மேல் பயன்படுத்தப்படும் 1,000 லிட்டர் அல்லது அதன் பாகத்திற்கு ரூ. 15/– வீதம் வசூலிக்கப்படும்.

13 (அ) அளவுமானி முறையிலான கட்டணத்தை, குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் நகராட்சி கருவூலகத்தில் செலுத்தவேண்டும். ஒவ்வொரு திங்களுக்கும் 10 நாட்களுக்குள் அனுப்பும் குடிநீர் கட்டண கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய திங்களில் உபயோகப்படுத்தப்பட்ட குடிநீர் அளவுக்கு உரியதாகும்.

(ஆ) மேற்கண்ட துணைவிதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது வேண்டுமானாலும் இணைப்பை துண்டிக்க அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் குடிநீர் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் துண்டிப்பு செய்யும் பட்சத்தில் ஏற்படும் கால இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் நகராட்சியின் ஆணையர் பொறுப்பு அல்ல. குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர்தான் பொறுப்பு ஏற்கவேண்டும்.

(இ) இந்த துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்ட

(b) Meter shall be supplied by the owner or occupier of the building and maintenance charge of Rs. 5 per month will be levied.

(c) If any defect occurs in the meter supplied by the owner or occupier of the premises he or she shall arrange to have the meter repaired or removed at his or her cost under the supervision of the executive authority within two months from the date of the receipt of orders from authority failure to do so will lead to disconnection.

A security deposit in advance towards payment of water charges shall be collected in the manner as below persons desiring to obtain water connections shall remit the deposit.

11 (a) Domestic Purpose Rs. 3,000/- per connection

(b) Commercial Purpose Rs. 6,000/- per connection.

(c) Industrial Purpose Rs. 10,000/- per connection.

12 **Water Charges :**

(a) Rs. 50/- per month upto 7500 litres, upto 10000 litres. Rs. 6/- per 1000 litres or part thereof. From 10000 litres Rs. 8/- per 1000 litres or part thereof.

(b) For Industrial / Commercial purpose Water Charges minimum of Rs. 100/- upto 7500 litres. From 7500 lts Rs. 15/- for every 1000 litres and part thereof.

13 (a) The water charges shall be remitted within 15 days from the date of the receipt of demand basd on the meter reading. Demand for water charges will be made before 10th of every month for the consumption for the previous two months.

(b) If the amount is not paid in the above period, the Executive authority shall be at liberty to cut off the service after the demand is made. If the amount is not paid with in the above time, the E.A. shall not be liable for any damages for such disconnection.

மதுரை. சி. வெ. 23 / 07.

திட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் முறைப்படி குறித்த காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்துவரி வசூல் செய்யும் முறையில் உள்ள விதிகளின்படி வசூல் செய்யப்படும்.

(ஈ) நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தாததால் துண்டிக்கப்படும் இணைப்புக்கு துண்டிப்பு கட்டணம் ரூ. 250/–ம் இணைப்புக் கட்டணம் 250/– ஆக மொத்தம் ரூ. 500/– வசூல் செய்யப்படும். இத்தொகை கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் அல்லது தனியாக நகராட்சியில் செலுத்த வேண்டும்.

14 குடிநீர் உபயோகப்படுத்தாத ஒரு காலாண்டின் பகுதிக்கான கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படாமலிருக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் ஆணையர் கட்டணத் தள்ளுபடி வழங்கலாம். ஆனால் அவ்வாறு குடிநீர் பயன்படுத்தாமல் இருந்தால் முன்கூட்டியே ஆணையருக்கு எழுத்து மூலமாக தகவலை தெரிவித்து குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்து கொண்டிருக்கவேண்டும். இவ்வாறு இருக்கும் காலத்தில்தான் காலண்டுக்கு கட்டணம் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு இணைப்பு துண்டிக்கப்படும்போது துண்டிப்பு கட்டணம் ரூ. 250/– ம். மறு இணைப்புக் கட்டணம் ரூ. 250/– ம் ஒவ்வொரு முறையும் வசூல் செய்யப்படும்.

குறிப்பு : இந்த துணை விதிகளில் வரும் காலாண்டு என்பது மூன்று முழு நாளிட்ட திங்கள் அல்லது 90 நாட்கள் என்று பொருள் கொள்ளவேண்டும்.

15 (அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் அளவுமானியில் கணக்கு எடுக்கும் நாளிலிருந்து நான்கு வாரங்கள் அல்லது 30 நாட்களுக்குள் ரூ. 250/– வைப்புத் தொகையாக செலுத்தி எழுத்துமூலம் அறிவிப்பு செய்து கொள்ளவேண்டும்.

(ஆ) மேலே நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத் தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்த ஆய்வுக்குப்பின் தெரியவந்தால் வைப்புத் தொகை திரும்பத் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

16 குழாய் இணைப்பில் உள்ள அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதாக இல்லை என்று

(c) Payment for all water supplied under the terms and conditions laid down in these bye laws if not made by the party concerned with in the time stipulated shall be recoverable in the same manner as within the norms property tax collection.

(d) For disconnected service connections on payment of disconnection charges of Rs. 250/- + reconnection charges of Rs. 250/- Totally Rs. 500/- will be charged.

14. No remission for non use of water shall be granted for a portion of a quarter. Remission may be granted by the Executive Authority for non use of water for full quarter subject to previous intimation of such non use with request to close the water supply temporarily and subsequent demand for revision. The charge for such temporary disconnection shall be Rs. 250/- and reconnection charges shall be Rs. 250/- on each occasion.

N.B. The word'quarter' in this means three full months or 90 days of this bye law.

15 (a) Persons aggrieved regarding the meter readings and dispution the meter reading 30 days of the reading or faulty accompanied by a deposit of Rs. 250/- Estimate or aggrieved by any defects in the estimates shall on writing.

(b) Complaint not made with in the above said period or not accompanied by the request deposit will not be entertained. No complaints beyond such period and complaint not accompanied by such deposit will be entertained.

(c) The deposit amount will be returned if on investigation the meter is defective or faulty reading. If the meter is properly functioning without any defect the deposit shall be forfeited.

கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமானி ஒருவார காலத்திற்கு மேலாக பழுது அடைந்து இருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது அந்த திங்களில் பயன்படுத்தியதற்கான அளவுகளில் பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் ஆணையர் மிகப்பொருத்தமானது எனக் கருதும் புள்ளி விவரங்களின் அளவுகள் அந்த பிரச்சனைக்குரிய மேற்கண்ட காலக் கட்டங்களில் கட்டணம் வசூல் செய்வதற்கு அடிப்படையாக கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்த கால அளவில் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீர் அளவாகக் கருதப்பட்டு கணக்கிடப்படும். இது குறித்து ஆணையர் முடிவே இறுதியானதாகும்.

17 வீட்டிணைப்புகளின் பயன் குழாயின் யாதொரு கைவிசை நீரேற்றுக் குழாய் அல்லது விசை நீரேற்றும் குழாய்களைப் பொருத்த அனுமதிக்கப்பட மாட்டாது. பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித அறிவிப்புமின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

18 குடிநீர் குழாய்களை தொட்டி அல்லது சேமிப்பு தொட்டியுடன் நேரடியாக இணைக்கப்படலாகாது. இந்த இணைப்பு துணை விதிகள் 23 மற்றும் 24 க்கு பொருந்தாது.

19 ஒவ்வொரு வீட்டு உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் நகராட்சியிலிருந்து குடிநீர் குழாய் இணைப்பு பெற்ற இருந்தால் அதை நல்லமுறையில் வைத்துக்கொள்ள வேண்டியது. பழுதுகள் ஏற்பட்டால் அவருடைய சொந்த செலவில் செய்துகொள்ள வேண்டும்.

20 குடிநீர் குழாயில் உள்ள நிலையை பரிசோதனை செய்யும் பொருட்டு அந்தக் குடிநீர் குழாயின் இணைப்பில் உள்ள குழாய் அல்லது இணைப்புகளை ஆணையர் அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும்போதோ அல்லது வேறு காரணங்களினாலோ குழாய்கள் அல்லது அவற்றின் இணைப்புகளோ பழுதுபட்டு இருந்தால் இதை பழுது நீக்குவதற்கோ அல்லது புதிய இணைப்புகளில் பொருத்துவதற்கோ சரி செய்வதற்கோ ஆணையர் குடியிருப்பில் உள்ள உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கும் ஒரு திங்கள் காலவரை கொடுத்து ஒரு அறிவிப்பு கொடுக்கப்படும். அறிவிப்பில் கொடுக்கப்பட்ட காலவரைக்குள் பழுது நீக்கப்படவில்லை என்றாலும், இணைப்புகளை சரி செய்யப்படவில்லை என்று தெரியவருமேயானால் பழுது காரணமாக இணைப்புகளில் நீர் விரையமாகும் அல்லது குடிநீர் தூய்மை கெடும் எனக் கருதினால் ஆணையர் இந்தக் குழாய் இணைப்புகளையும் மற்ற இதர பணிகளையும் நகராட்சி பணியாளர்கள் மூலம் முடித்து அதற்காகும்

16 In case where the meter is not functioning or faulty for more than one week. One week the consumption recorded during the corresponding month of the privious year or where this information is not available such available data as the Executive Authority considers most suitable will be taken so arrived at shall be deemed to be the quantity of water actually consumed. The decision of the Executive Authority in the matter should be final.

17 No hand pump or power pump shall be fitted to the House Service Connection. If it is formed found utilised in the service connection that will be disconnected without any notice to the party concerned.

18 No tap of any service connection, shall be fixed or connected to a tub and cistern except in cases specify in bye law 23 and 24 section. The water connection will not be linked with sump or storage tanks this bye law not applicable for at 23 & 24.

19 Every person to whom a house service connection is or has been given by the Municipality shall maintains the house connection in good condition and repairs at his own cost.

All connections given by the Municipality shall be maintained in good condition by the owner or occupier and repairs shall be done at their own cost.

20 The Executive Authority may at any time remove any pipe or fittings connected with any house service connection for the purpose of examining the conditions of (or) repairing of such fittings. If on such examination otherwise it is found that the pipes or fittings are defective in any respect the Executive Authority may give notice to the owner or occupier of the premises to execute with in a specified period or say one month at the most that the work necessary to remedy such defect may be carried out. If the work is not executed within the time allowed in the notice or if the defection is likely to cause waste or on contaminated of water the Executive Authority may himself execute such work and

செலவினை வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்போரிடம் இருந்து வசூல் செய்யப்படும். அவ்வாறு இல்லையென்றால் இணைப்பை துண்டிப்பு செய்துவிட்டு இணைப்பிற்கு நீர் வழங்குவதை நிறுத்தம் செய்யலாம்.

recover the cost from the owner or occupier or alternatively the water supply connection will be disconnecting.

21 குடும்பப் பயன்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுக் குழாய் இணைப்பிலிருந்து கிடைக்கம் குடிநீரை ஆணையரின் எழுத்து மூலமாக முன் அனுமதியின்றி குடும்பப் பயன்கள் அல்லாத பிற காரியங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பின் உரிமையாளர் இணைப்புள்ள வீட்டின் குடியிருப்பாளர் குடும்ப பயன்களுக்கான குடிநீரை அவையல்லாத பிறவற்றிற்கு பயன்படுத்துவதாக ஆணையர் அறிபவரின் அல்லது அவ்வாறு நம்புவதற்கு காரணங்கள் இருந்தாலும்அவர் தாம் அறிவிக்கும் நாளிலிருந்து துணை விதி 12 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்ப பயன்களுக்க அல்லாத வீதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு "உரியவரை" தன்னுடைய "ஆதாரப்புள்ளி விவரங்களின்" அடிப்படையில் கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர் செலுத்தத் தவறினால் அந்த வீட்டிணைப்பை துண்டித்துவிட ஆணையர் உத்தரவிடலாம்.

21. Water from a house service connection given for domestic purpose and use shall not be used for non domestic purpose without prior approval from Commissioner. But, if the Commissioner finds that the owner of the house having domestic connections uses the water for non-domestic purposes or if the Commissioner shall from the date of notice shall require the user to remit charges as per the bye-law section 12 at the rates prescribed for non domestice supply as per the available details and on failure to pay the said charges the water supply connection shall be disconnected by the Commissioner.

22 நகராட்சியில் இருந்து பெறப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்றுக் குழாயை அமைத்தல் அல்லது விசை நீரேற்றும் கருவி இணைப்புக் குழாய் அல்லது அசையும் குழாய் அதுபோன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி நீர் பெரும் குழாயில் இருந்து குடிநீர் ஈர்க்கப்படக்கூடாது. அவ்வாறு ஈர்ப்பது கண்டுப்பிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகள் பறிமுதல் செய்யப்படும். பொருட்கள் யாதும் திருப்பி தரப்படமாட்டாது. மீண்டும் மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகள் பொருத்த மாட்டேன் என்ற உத்தரவாதத்துடன் ரூ. 5000/– அபராதத் தொகை பெற்றுக் கொண்டபின்பு தான் இணைப்பு வழங்கப்படும் இரண்டாவது தடவையாக குடிநீர் இணைப்புகளில் மின்கருவிகளை வைத்து ஈர்ப்பது கண்டிபிடிக்கப்பட்டால் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

22 The House owner or occupier shall not draw water by movable pipe or Electric motor or any other device. If such illegal House Service connection will draw in detections be disconnected and more over Electric motor and other materials should be forefeited and not returned to the party. The party should give written concurrance for his mistake to Commissioner together with a penality of Rs. 5000/- with an indeminity bond to the effect that further such illegal drawal will not the re-sorted by the owner or occupier. If any such illegal drawal is detected for the second time, the service connection will be permanently disconnected and prosecution will be launched before the court. All applications for a water supply House Service Connection for providing rain water harvesting arrangements. If it is under ground drainage scheme functioning municipalities or drainage application should be submitted along with deposit amount and other charges etc. If the scheme is not force in such municipality for a arrangement is made for drainage disposal.

23 குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைத்திருப்பதுடன், வெளி செல்லும் கழிவுநீரை வெளியேற்ற புதைவடிகால் திட்டம் நடைமுறைப்படுத்த இருக்கும் நிலையில் நகராட்சி தெரிவிக்கும் வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை செலுத்தி புதைவடிகால் இணைப்புக்கும் விண்ணப்பம் செய்ய வேண்டும். மேலும் விண்ணப்பிக்கும் பகுதியில் இத்திட்டம் இல்லாதிருந்தால் வெளியேறும் கழிவுநீரை தனியாக தொட்டி ( cess poll ) அமைக்க வேண்டும்.

23 All applications for a water supply House Service connection for providing rain water harvest arrangements. If it is under ground drainage scheme is functioning municipalities or drainage application should be submitted along with deposit amount and other charges etc. If the scheme is not force in such municipality a seperate arrangement is made for drainage disposal ( cess poll )



2

24 பொதுக்கழிப்பிடம், சிறுநீர் கழிக்குமிடம், மலக்கழிப்பிடம் ஆகியவற்றிற்கு குடிநீரின் குழாயிலிருந்து இணைப்புப் கொடுக்கப்பட வேண்டுமானால் இதற்காக ஒரு தொட்டியை அமைத்து அதற்குத் தேவையான உபகரணங்களுடன் பொருத்தி நகராட்சி பொறியாளர் முடிவு செய்யுமிடத்தில் நிறுவப்பட வேண்டும்.

24. Public latrine, urinal or water closet which is supplied with water from the protected water supply shall be situated in such manner and in such locations as directed by the Municipal Engineer.

25 கொதி கலன்களுக்கு நகராட்சியின் பகிர்மான குழாய்களிலிருந்து தேவைப்படுமானால் அதற்காக தனியாக தொட்டியிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர குழாயிலிருந்து நேரடி இணைப்பு வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு தொட்டிக்கும் தனியாக பந்து திறப்பான், கண்காணிக்கும் அல்லது எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்பட்டு அவைகளை சரியான முறையில் அணுகி ஆய்வு செய்வதற்கு தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும்.

25 Steam boiler which requires water from a Municipal pipe supply shall be supplied from a cistern and not directly from the service pipe and every such cistern shall be supplied with a ball valve, a detective or warning pipe and proper means by access for inspection thereof.

26 தீ விபத்து நேரிடும் சமயங்களைத் தவிர மற்ற சமயங்களில் நகராட்சியின் ஆணையர் பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெறாதவர்களால் பிரதானக் குழாய் அல்லது பகிர்மானக் குழாய்கள், திறப்பான்கள் தீயணைப்புக்கு வைக்கப்பட்டிருக்கும் நீர்க் கருவிகள் அவற்றை நிறுத்துதல் அல்லது தடை ஏற்படுத்துதல் கூடாது.

26 Except in cases of fire, no person not duly authorised by the Municipal Commissioner or the Municipal Engineer in that behalf shall open or in any way interfere with any main or pipe or fire plug with the municipal water supply shall stop The flow off or interfere with the flow of the water main or distribution lines or cistern or fire hydrants of the Municipal Water Supply System.

27 ஆணையர் அவர்கள் உத்தரவின் பேரில் திருமணம் மற்றும் இதர சந்தர்ப்பங்களில் ஒரு கட்டடத்திற்கு தற்காலிகமாக இணைப்புகள் வழங்கப்படும். இந்த இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பாகத்திற்கு ரூ. 100/-ம் பெருங்குழாயுடன் இணைக்கும் இணைப்பிற்கு ரூ. 250/-ம் அதை திரும்பத் துண்டிக்கும்போது ரூ. 250/-ம் கட்டணமாக வசூலிக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்பு 15 எம்.எம். அளவுள்ள சேதமற்ற குழாய் ஒன்று 3 மீட்டர் கொண்டதாக இருக்கும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்புகளுக்கு இணைப்பு கேட்டவர்களோ அல்லது அவ்வாறு தற்காலிகமாக இணைப்பு கொடுக்கப்படும் கட்டடத்தின் உரிமையாளர்களோ இந்த இணைப்பு செய்வதற்கு தேவையான பொருட்கள் மற்றும் இதர உபகரணங்கள் அவர்கள் பொறுப்பிலும், செலவிலும் செய்துகொள்ள வேண்டும். கூடுதலாக குழாய்கள் தேவைப்படின் ஒவ்வொரு குழாய்க்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ. 50/- வீதம் வசூல் செய்யப்படும். மேற்படி தற்காலிக இணைப்பு ஒவ்வொரு தருணத்திலும் 5 நாட்களுக்கு மேற்படக் கூடாது.

27 The Executive Authority may sanctioned temporary connections for the supply of water to a building during marriage or other occasions charges therefore shall be levied at Rs. 100/- per connection per day or part thereof. In addition to sum of Rs. 500/- ( Rupees Five Hundred ) which shall be levied for making ( Rs. 250 ) and breacking ( Rs. 250 ) the connection at the main. Every such connection shall have only a 15 mm Tap and a length 3 meters of 15 mm pipe at end. All materials and unskilled labour required for the purpose shall be supplied by the applicant for such connection. In additional taps required, for every additional tap at the rate of Rs. 50- ( Fifty ) per day or part of the day shall be charged. This temporary connection should not be exceed for more than 5 days in each occasions.

28 ( அ ) குடிநீர் இணைப்பில் பொருத்தப்பட்ட அளவுமானியை எவரும் வைக்கப்பட்டுள்ள முத்திரையை நீக்கவோ அல்லது பூட்டை உடைக்கவோ அல்லது அளவுமானியில் பொருத்தப்பட்ட கண்ணாடியை சேதம் செய்யவோ அல்லது அளவுமானியை திறக்கவோ அல்லது அதன்மீது உள்ள குறிப்பை மாற்றவோ அல்லது அளவுமானி கணக்கிடும் நீரின் அளவை பதிவு செய்யும் பகுதியை தடை செய்யவோக் கூடாது.

( ஆ ) குடிநீர் வழங்கும் அளவுமானி கருவி பதிவு செய்வதற்கு முன்னால் குடிநீரை எடுக்கும் முறையை தவிர்க்க வேண்டும்.

28 (a) No person shall break the seal or the lock in the meter or break the glass on the dial or open the meter or change the recording device of the meter or do any out that may interferes with the proper functioning of the meter.

(b) No person shall draw water before the meter fixed for measuring has been real and the reading registered.

(இ) அளவுமானி அளவு பதிவு செய்வதைத் தடுக்க அளவுமானியை சேதப்படுத்தவோ அல்லது அளவுமானியை களவாடிச் செல்வதையோ அனுமதிக்கப்பட மாட்டாது. அல்லது அதற்கு காரணமாக இருத்தல் கூடாது.

29 (அ) இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட எல்லா குடிநீர் இணைப்புக்கும் குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்காக கொடுக்கப்படும் இணைப்புகளுக்கும் பொருந்தும் எனவும் துணை விதிகளின்படி மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்களிலும் பொருந்தும். அவ்வாறு உள்ள வீட்டு இணைப்புகள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய எல்லா கட்டணங்களையும் குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் ஏற்றுக்கொண்டால் வீட்டு இணைப்புகள் அதிகாரப்பூர்வமாக செல்லத்தக்கதாய் ஏற்றுக் கொள்ளப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறினால் இந்த இணைப்புகள் நகராட்சியின் ஒப்புதல் பெறாத இணைப்புகளாய் கருதி வீட்டு உபயோக இணைப்புகளுக்கு அபராத தொகையாக நாளொன்றுக்கு ரூ. 3000/– குடியிருப்பு இல்லாத வணிகம் மற்றும் தொழிற்சாலை இணைப்புக்கு நாளொன்றுக்கு ரூ. 5000/– விதம் வசூல் செய்யப்படும். தொடர்ந்து குற்றம் செய்யப்படும் பட்சத்தில் குழாய் இணைப்பு நிரந்தரமாக துண்டிக்கப்படும்.

(ஆ) குடிநீர் இணைப்புகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த செயல்முறைகள் திருத்தப்பட்ட துணை விதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து செல்லத்தக்கவை ஆகாது.

(இ) புதிதாக குடிநீர் இணைப்பு பெற விரும்புகிறவர்கள் நகராட்சிக்கு நடப்பு நிதியாண்டு முடிய உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள், வரியில்லா இனங்கள் ஆகியவைகளை செலுத்தி அதற்கான இரசீது நகல்கள் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

30 குடிநீர் வழங்கும் ஆதாரத்தில் நீர் பற்றாக்குறை இருப்பதாலோ அல்லது குடிநீர் குடும்ப பயனுக்காகவோ அல்லது பிற காரியங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தவறுதலாக பயன்படுத்துவதாகவோ அல்லது இணைப்புகள் வேண்டுமென்றே பழுதாக்கப்படுகிறது என்று நகர்மன்றத்திற்கு தெரியவந்தாலோ 24 மணி நேர அவகாச எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து இணைப்பை துண்டிக்கும் உரிமை நகராட்சி மன்றத்துக்கு உண்டு. இத்தகைய சமயங்களில் ஏற்படும் எந்த இழப்பிற்கும் நட்டத்திற்கும் நகராட்சி மன்றமோ அல்லது ஆணையரோ பொறுப்பாளி அல்ல என தெரிவிக்கப்படுகிறது.

31 ஒவ்வொரு இணைப்பின் தகுதியையொட்டி மேற்பார்வை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில் அரசினருக்கு உரிமையான ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய எல்லா நிறுவனங்களுக்கும் இத்துணை விதிகள் பொருத்தும்.

(c) No person shall allow the theft of the water meter or cause the same to be damaged in such manner as to result in its improper functioning.

29 (a) All house service connections granted before these bye-laws come into force shall be recongnised as valid as through they had been granted under these bye-laws shall be recognised as authorised condition under the purview of these bye law if the owner or occupier remits the rates applicable under these bye-laws. If the said charges is not paid these connections are to be treated as for non domestic illegal connections and fine will be imposed Rs. 3000/- for domestic Rs. 5000/- for non domestic these connections to be disconnected with fine in continuous offence, the House Service Connection will be disconnected permanenty.

(b) The bye-laws already in force are repeated with effect from the date on which these bye laws come into operation.

(c) The owner or occupier of the building for applying new House Service Connection along with the receipt of tax and non tax upto date after remittance of taxes and these cases only be considered.

30 If there is scarcity of supply of water or if the drinking water in supplied for a certain type of under other purpose or if it is found that the water connection are wantedly damaged, the said water connection will be disconnected after giving a notice of 24 hours. The Municipal Council has this power either the Commissioner or Municipal Council is not responsible for any loss on such account.

31 These bye laws shall be applicable to such institutions, owned, controlled and managed by government as may be decided by the Superintending Engineer, Commissioner of Municipal Administrations Office, Chennai.

மதுரை. சி. வெ. 23 / 07.

20

32 துணை விதி 22 தவிர மேற்சொன்ன விதிகளை மீறும் அல்லது சேதமிழைக்கும் நபர் எவரும் கீழ்கண்டவாறு தண்டனை பெறத்தக்கவராவர். ரூ. 500/– வரை அபராதமாக தொடர்ந்து செய்யப்படும் குற்றத்தை நிறுத்துமாறு எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து செய்யப்படுமானால், தொடர் அபராதமாக நாள் ஒன்றுக்கு ரூ. 25/– விதிக்கப்படும். மீண்டும் அதே குற்றம் இழைக்கப்படுமானால் குழாய் இணைப்பு துண்டிப்பதுடன் நீதித்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

32 Whoever commits a enough of any of the any person above bye laws shall be punishable contravening any of them bye-laws shall be liable to penalities as under.

Contravention of bye-law other than bye-law No. 22, a person is liable for fine of Rs. 500/- ( Rupees five hundred only ) if the violation continuous on receipt of intimation a sum of Rs. 25/- ( Rupees twenty five only ) should levied and water connection will be disconnected thereafter and criminal action will also intitiated through the court.

33 குடிநீர் குழாய் இணைப்பு தேவைப்படுவோர் படிவத்தை ( படிவம் – அ ) ரூ. 10/– நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

33 For applying House service connection the house owner or occupier should get the Form 'A' after remittance of Rs. 10/- into Municipal Treasury.

## 2. பொது குடிநீர் குழாய்க்கான துணை விதிகள்

## 2. PUBLIC FOUNTAINS BYE LAWS

(1) எவரும் பொதுக்குடிநீர் குழாய் இணைப்புகளில் இருந்தோ, தீ அணைப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புகளில் இருந்தோ, வேண்டுமென்றோ அல்லது அசட்டையாகவோ குடிநீர் வெளியேறி வீணாக செல்லும்படி பயன்படுத்தக் கூடாது.

1. No person shall cause the state flow or leakageof water from the public water tap or fire hydrant.

(2) (அ) எவரும் 30 லிட்டர் கொள்ளளவிற்கு மேற்படாத பாத்திரங்களால் அன்றி வேறொன்றிலும் குடிநீர் குழாயிலிருந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

2. a) No person shall draw water from public fountain except in a vessel with a capacity of not more than thirty litres.

(ஆ) குடும்பப்பயன்களுக்காக அன்றி பிற உபயோகங்களுக்கு பொது குடிநீர் குழாயிலிருந்து குடிநீர் பிடிக்கக்கூடாது.

*b)* No person shall draw water from public fountain other than domestic.

(இ) பொது குடிநீர் குழாயிலோ அல்லது கால்நடைகளுக்காக அமைக்கப்பட்டிருக்கும் தொட்டியில் எவரும் குளிப்பதோ, துணிகள் துவைப்பதோ, வண்டிகள் கழுவுவதோ பிராணிகளை குளிப்பாட்டுவதோ கூடாது.

*c)* No person shall take bath or wash clothes or water vehicles, animals etc., at a public fountain.

(ஈ) மற்றவர்கள் காத்திருக்கையில் பொது குடிநீர் குழாயில் இருந்து ஒருவர் ஒருமுறைக்கு மேல் தொடர்ந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

*d)* When others are waiting No person shall draw water from a public fountain more than once.

(3) விபத்து நேரிட்ட காலங்களில் தீ அணைப்பிற்கு இன்றி பிற காரியங்களுக்காக எவரும் தீ அணைப்பிற்காக பொருத்தப் பட்டுள்ள குழாய் இணைப்பில் இருந்து நீர் எடுத்தல் கூடாது.

3. No person shall draw water for any other purpose from public tap or hydrants or water for cattle when a fire accident for happened.

(4) தீ விபத்தின் போது தீயை அணைப்பதற்காக அன்றி மற்றபடி எவரும் பொது குடிநீர் குழாயில் இருந்தோ தீ அணைப்புக் குழாயில் இருந்தோ தொடர்ந்து நீர் எடுக்கும் வகையில் அவைகளை இயக்கக்கூடாது. இவ்வாறு தீயணைப்புக்காக அன்றி பிற உபயோகங்களுக்காக பொது குடிநீர் குழாய் அல்லது தீயணைப்பு குழாயில் இருந்து சுயநல அடிப்படையோடு தொடர்ந்து ஒருவரால் குடிநீர் எடுக்கப்பட்டால் அவர் துணை விதிகளை மீறி நடந்ததாக கருதப்படுவதுடன் நகராட்சிகளின் சட்ட விதிகளின்படியும் அவர் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) அருவருக்கத்தக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள பிராணிகள் அல்லது மேற்சொன்ன நோய்களால் ஏதாவது ஒரு நோய் பற்றக்கூடும் என்றும் அவருக்குத் தோன்றக்கூடிய அல்லது அவருக்கு தெரிந்திருக்கக்கூடிய பிராணிகளை பொதுக் குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக் குழாய் இவற்றின் அருகே கொண்டு செல்லக்கூடாது.

(6) பொதுக் குடிநீர் குழாய் அல்லது தீயணைப்பு குழாய் ஆகியவற்றைச்சுற்றி எவரும் அசுத்தம் செய்தல் கூடாது. இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் நகராட்சிகளின் சட்டப்படி அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(7) தீ விபத்து நேரும்போது அன்றி ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்படாத எவரும் குடிநீர் தேங்கும் பிரதான குழாய் பகிர்மான குழாயில் உள்ள தடுக்கிதழ்கள் தீயணைப்பு குழாய் அல்லது நகர் மன்றம் குடிநீர்த் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பொதுக் குழாய் ஆகியவற்றிலிருந்து நீர் உறிஞ்சவோ அவைகளுக்கு சேதம் விளைவிக்கவோ கூடாது.

(8) பொதுக் குடிநீர் குழாய் அமைக்கும் இடத்தைச் சுற்றி வரிசைகள் போடுவதோ வரிசைக்காக உடைத்த குடங்கள், டப்பாக்கள் மற்றும் இதர பொருட்கள் வைக்கக்கூடாது. பொதுக் குடிநீர் குழாயில் குடங்களை கழுவி குடிநீரை வீணாக்கக்கூடாது.

4. No person shall continuously draw water from a public tap or fire hydrant or continuously operate the same. If a person draws water continuously from a public tap or fire hydrant for his own private purpose, he will be deemed to have violated this bye-law and appropriate action will be taken against him as per the provision of the Tamil Nadu District Municipalities. Act.

5. No person affected with any obnoxious or contgious or infectious disease shall use any public fountain or cattle tank or fire hydrants. No person shall take any animal which suffering from any loathsome contagious or infections discharged or mytiche which has been or which he know or reasons to know to have oposed to any infection from any or the alume discharge to or near any public fountain or cattle trough.

6. No person shall defeate or in any manner commit any nuisance ce in and around a public fountain.

7. Other than during fire accidents, no person without the authority of the Municipal Commissioner shall open or cause water to be drawn from any public tap or cistern or fire hydrant or water distribution main or cause any or of the above to be demaged.

8. No person shall any reservation for draw water from the PF, cannot admitted broken vessels and PF draw vessels should not be cleaned through public fountain water supply.

## தண்டனை

இந்த துணை விதிகளில் எந்த ஒன்றை மீறி நடப்பவர் எவராயினும் மேலும் ஏழு வயதுக்குட்பட்ட குழந்தையை தன் பொறுப்பிலே கொண்ட எவரும் அக்குழந்தை மேற்கண்ட துணை விதிகளை மீறி நடக்காமல் தடுத்து நிறுத்தத் தவறினாலும், அவர் தண்டனைக்கு உரியவர் என கருதப்படுவார். அவருக்கு ரூ. 1000/– வரையிலும் அபராதம் வசூலிக்கப்படுவதுடன் மேற்சொன்ன துணை விதிகளை தொடர்ந்து மீறப்படுமானால் நாளொன்றுக்கு ரூ. 100/– தொடர் அபராதமாக விதிக்கப்படும்.

## PENALITY

Who ever commits a breach of any of the bye-laws and who ever committing a breach or the exhaouse bye laws shall punishable with fine may extend to Rs. 1000/- ( Rupees one thousand only ) and a fine Rs. 100/- per day continous other bye-law.

Any person contravening any of these bye-law or a person in control of a minor child of less than 7 years of age failing to prevent such child from contravening any of the above bye-law in liable for penalty by way of fine of up to Rs. 1000/- ( Rupees one thousand only ) for continuing violation after the first instance a sum of Rs. 100/- ( Rupees one hundred only ) shall be levied for each day thereafter.

மேலூர்,
2007 செப்டம்பர், 26.

அ. ஆறுமுகம்,
ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.

தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் மதுரை அரசு கிளை அச்சகத்தில்
அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.

மதுரை. சி. வெ. 23 / 07.